# யூலை- 08 - சனி

**தூய உபால்ட்**

**அல்லேலூயா! ஆண்டவரின் பெயரைப் புகழுங்கள்: ஆண்டவரின் ஊழியரே! அவரைப் புகழுங்கள். திபா. 135:1**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 27 : 1– 5

ஈசாக்கு முதிர்ந்த வயதை அடைந்தபோது அவர் கண்களின் பார்வை மங்கிப்போயிற்று. அவர் தம் மூத்த மகன் ஏசாவை அழைத்து, ”என் மகனே” என்றார் ஏசா, ”இதோ வந்துவிட்டேன்” என்றான்.அவர் அவனை நோக்கி, ”இதோ பார் எனக்கு வயதாகிவிட்டது. சாவு எந்நாள் வருமோ என்றறியேன்.இப்பொழுது உன் கருவிகளான வில்லையும் அம்புக்கூட்டையும் எடுத்துக்கொள். காட்டுக்குப் போ. வேட்டையாடி, எனக்கு வேட்டைக்கறி கொண்டு வா.நான் விரும்பும் முறையில் சுவையான உணவு வகைகளைச் சமைத்து என்னிடம் கொண்டு வா. நான் அவற்றை உண்பேன். நான் சாகுமுன், உனக்கு மனமார ஆசி வழங்குவேன்” என்றார்.ஈசாக்கு தன் மகன் ஏசாவிடம் பேசியதை ரெபேக்க கேட்டுக்கொண்டிருந்தார்

**பதில்பாடல்:** ஆண்டவரைப் புகழுங்கள் ஏனெனில் அவர் நல்லவர்

## நற்செய்தி : மத்தேயு 9 : 14 - 17

அக்காலத்தில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, ”நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?” என்றனர்.அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.மேலும் எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. ஏனெனில் அந்த ஒட்டு ஆடையைக் கிழித்துவிடும் கிழிசலும் பெரிதாகும்.அதுபோலப் பழைய தோற்பைகளில் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றி வைத்தால் தோற்பைகள் வெடிக்கும் மதுவும் சிந்திப்போகும் தோற்பைகளும் பாழாகும். புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றி வைப்பர். அப்போது இரண்டும் வீணாய்ப் போகா” என்றார்.

**தியானம்:** சிலருக்கு பிறர் நன்றாக, மகிழ்ச்சியாக, அமைதியாக வாழ்வதனைச் சகிக்க முடியாது. இன்னும் சிலர் பொது நன்மைக்காகத் தாமாக முன் வந்து நற்செயல்கள் செய்யமாட்டார்கள். ஆனாலும், அடுத்தவர்கள் செய்கின்ற நல்ல காரியத்தையும் தமது பணத்திமிர், மற்றும் செல்வாக்கைப் பாவித்து அவற்றைக் குழப்புவர். இப்படிப்பட்டோர்கள் இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்படும் பரிசேயர்கள் போன்றவர்கள். இவ்வாறானவர்களே, ”நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?” (மத்தேயு8:14) என்று கேட்பதாக இன்றைய நற்செய்தியை நாம் பொருள் கொள்ளலாம். இயேசு எமக்கு வழங்குகிற வாழ்க்கை சிங்காரவனத்தில் ஆதிப்பெற்றோர் வாழ்ந்த சிறப்பான வாழ்வு நாம் வாழவேண்டும் என்பதாகும். அதுவே அவரது ஆசை. புதிதாய் மணமுடித்த மணமக்களாக வாழ் நாள் முழுவதும் வாழவேண்டும் என்பதே அவரது ஆவல். எமது வாழ்க்கை ஒரு விருந்து கொண்டாட்டமாக இருக்க வேண்டும் என்பதே இயேசுவின் எதிர்பார்ப்பு. அவர் தாம் கொண்டு வந்த விண்ணரசையே ஒரு திருமணவிருந்து என்று போதித்தார் (மத்தேயு22:8). இன்றைய நற்செய்தியில் இயேசு தன் சீடர்கள் நோன்பிருக்காததை நியாயப்படுத்திப் பேசுகிறார். அதேவேளையில், தேவையான நேரத்தில் அவர்களும் நோன்பிருப்பார்கள் என்று பதில் கூறி, சீடர்களையும் தயாரிக்கின்றார். நோன்பு என்பது தேவை மற்றும் சூழலின் அடிப்படையில் செய்ய வேண்டியது என்பதை, யேசுவே தன் வாழ்வில் வாழ்ந்து காட்டினார். தனது பணிவாழ்வின் தொடக்கத்தில் 40 நாள்கள் தொடர்ந்து நோன்பிருந்தார். தனது பணி வாழ்வின் போது உணவு உண்ணக் கூட நேரமில்லாத வேளைகள் வந்தபோது, அவர் நோன்பிருந்தார். அதே வேளையில் சக்கேயு போன்றவர்களால் விருந்துண்ண அழைப்புகள் வந்தபோது, அதை ஏற்று நன்கு உண்ணவும் செய்தார், உறவை வளர்த்தார். நமது வாழ்விலும் அத்தகைய சமனான மனநிலையைக் கொள்வோமாக. தேவையான நேரத்தில் நன்கு உண்ணுவோம், மகிழ்வோம், இறைவனுக்கு நன்றி கூறுவோம்.